# இலங்கையர்கள் அனைவருக்கும் செய்யப்படும் அறிவித்தல்

தாங்கள் அனைவரும் அறிந்தவாறு, 2018-08-01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்க வரத்தக்கதாக ஐக்கிய அரபு எமிரேற் அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட் பொது மன்னிப்புக் காலம் நடைமுறைக்கு வரும். துபாய் குடிவரவு உத்தியோகத்தர்களினால் எமது கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிவித்துள்ளாவறு விசா விதிமுறைகளை மீறியவர்களின் குறித்த இந்த நிலைமையை சட்டபூர்வமானதாக ஆக்குவதற்கும் விசா விதிமுறைகளை மீறியவர்களை இந்த நாட்டிலிருந்து வெளியேறச் செய்விப்பதற்கும் ஐக்கிய அரபு எமிரேற் அரசாங்கத்தினால் பின்வரும் நடவடிக்கைமுறைகள் பின்பற்றப்படும்.

**பிரித்தெடுத்த பகுதி**

* **விசா விதிமுறைகளை மீறியவர்களின் குறித்த இந்த நிலைமையை சட்டபூர்வமானதாக்குதல்**

    - ஏற்புடையதாகும் நிதி ரீதியிலான தண்டப் பணங்களிலிருந்து விடுவித்தல் (வதிவிட நிலைமையின் மீது எமிரேட் அடையாள அட்டை, தொழிலாளர் அட்டை என்பவற்றின் மீது விதிக்கப்பட்ட தண்டப்பணம்)

    - அனுசரணையாளரிடம் (Sponsor) மீண்டும் செல்லாது தலைமறைவாவதற்கு (Absconding) ஏற்புடையதான கோவைகளை மூடுதல் .

    - விசா விதிமுறைகளை மீறியவர்களின் குறித்த இந்த நிலைமையை சட்டபூர்வமானதாக்குவதற்கு 521 திராம் கொண்ட தொகை அறிவிடப்படும்.

    - விசா நிலைமைகளை மீளப் புதுப்பிக்கும் போது அல்லது புதிய அனுசரணையாளர்களின் கீழ் செல்லும் போது வதிவிட பிரசைகளுக்கு ஏற்புடையதாகும் சட்டங்களுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

* **விசா விதிமுறைகளை மீறியவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுதல்**

    - தண்டப் பணங்கள் சகலவற்றிலிருந்தும் விடுவிக்கப்படுவதோடு ஏதேனும் தலைமறைவு சம்பந்தமான கோவையொன்று திறக்கப்பட்டிருப்பின் அதனை மூடுதல்.

    - அனுசரணையாளர் தனி ஆள் ஒருவராக இருந்து தலைமறைவு சம்பந்தமான கோவையினை மூடுவதற்கு விண்ணப்பிக்கப்படுமாயின் 121 திராம்கள் கொண்ட தொகையொன்று அறவிடப்படுவதோடு, இது தனியார் நிறுவனமொன்றில் சேவையாற்றிய ஆள் ஒருவர் சார்பில் 521 திராம்களாகவும் அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றிய ஆள் ஒருவர் சார்பில் 71 திராம்களாகவும் அறவிடப்படும்.

    - வெளியேறும் உரிமப் பத்திரத்திற்கான கட்டணம் 221 திராம்கள் ஆகும்.

    - வெளியேறும் உரிமப் பத்திரமொன்று கட்டாயமாக இருத்தல் வேண்டும்.

    - கடவுச்சீட்டொன்று இல்லையாயின் அதற்குப் பதிலாக கொன்சியுலேட் ஜெனரல்

அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பிரயாண பத்திரம் ஒன்றினை குறித்த ஆள் வைத்திருத்தல் வேண்டும்.

- விசா விதிமுறைகளை மீறியவர்களினால் உரிய குடிவரவு உத்தியோகத்தரிடம் (அமீர் குடிவரவு குடியகல்வு அலுவலகம்) உரிய திகதியன்றுக்கு பத்து நாட்களுக்குப் பிந்திய திகதியொன்றில் ஒதுக்கப்பட்ட விமான பயன சீட்டொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

- விசா விதிமுறைகளை மீறியவர்களுக்கு எவ்வித தடையிமின்றி நாட்டிலிருந்து வெளியேறலாம்.

பிரித்தெடுத்த பகுதி முடிவுற்றது.

இவற்றுக்கு மேலதிகமாக மேற்குறிப்பிட்ட நடவடிக்கை முறைகள் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டு துபாய் குடிவரவு அதிகாரிகளினால் வெளியிடப்பட்ட கைநூலில் பின்வரும் வழிகாட்டல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பிரித்தெடுத்த பகுதி**

- Human Resources and Emiratization அமைச்சினால் உரிய விண்ணப்பதாரர்களுக்கு ஆறு (06) மாத காலத்திற்கான தற்காலிக வதிவிட விசா வழங்கப்படும்.

- இதன் ஊடாக கிடைக்கப் பெறும் நலனானது துபாயில் விசா மற்றும் உள்வரும் உரிமப்பத்திரம் (Entry permit) என்வற்றின் மீது விசா விதிமுறைகளை மீறியவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும்.

- ஏதேனும் விசா விதிமுறைகளை மீறிய ஒருவர் இந்த நாட்டினுள் விசா நிலைமையை சட்டபூர்வமானதாக மாற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றாராயின் குறித்த ஆளின் விசா வேறு எமிரேற் ஒன்றினால் வழங்கப்பட்டிருந்தால் அதேபோன்று குறித்த ஆள் சார்பில் தலைமறைவு தொடர்பான கோவையொன்று திறக்கப்பட்டிருந்தால் அவர் உரிய கோவையை மூடுவதற்கு உரிய எமிரேற் அதிகாரிகளுடன் தொடர்புகொள்தல் வேண்டும்.

பிரித்தெடுத்த பகுதி முடிவுற்றது.

மேற்போந்த விடயங்களை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு பின்வரும் விதத்தில் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ள காலப்பகுதியிலான நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பிரிவுகளுக்குரிய இலங்கையர்களுக்கு பின்வரும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(அ) பொது மன்னிப்பின் கீழ் நாட்டிலிருந்து வெளியேற எதிர்பார்க்கும் இலங்கையர்கள் .

(01) பொது மன்னிப்பின் கீழ் நாட்டிலிருந்து வெளியேற எதிர்பார்க்கும், சட்டபூர்வமற்ற விதத்தில் நாட்டில் தங்கியிருந்த இலங்கையர்களை பின்வரும் மூன்று (03) பிரிவுகளாக பிரிக்கலாம்.

I. செல்லுபடியாகும் கடவுச்சீட்டொன்றுள்ள இலங்கையர்கள்

II. காலம் கடந்த கடவுச்சீட்டொன்றுள்ள இலங்கையர்கள்

III. தங்களுடைய கடவுச்சீட்டுக்கள் காணாமற்போன அல்லது களவாடப்பட்ட இலங்கையர்கள்

(02) துபாய் கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகம் துபாய் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுடன் இணைந்து பின்வருமாறு நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு மேலே வகைப்படுத்தப்பட்ட இலங்கையர்களுக்கு வாய்ப்பு வழங்கும்.

I. சட்டபூர்வமற்ற விதத்தில் இந்த நாட்டில் ஒருகாலம் தங்கியிருந்து செல்லுபடியாகும் கடவுச்சீட்டொன்றைக் கொண்டுள்ள இலங்கையர்களுக்கு உரிய எமிரேற் அதிகாரிகளிடம் (அவர்களுடைய விசா வழங்கிய எமிரேற்) தங்களுடைய தண்டப் பணத் தொகையிலிருந்து விலக்குப் பெற்று குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளினால் அறவிடப்படும் பெயரளவிலான கட்டணத்தை செலுத்தி நாட்டிலிருந்து வெளியேறலாம்.

II. காலம் கடந்த கடவுச்சீட்டொன்றைக் கொண்டுள்ள இலங்கையர்களுக்கு குறித்த கடவுச்சீட்டுடன் துபாய் இலங்கை கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்திற்கு சமூகமளித்து புதிய செல்லுபடியாகு கடவுச்சீட்டொன்றை விண்ணப்பிக்கலாம். அதன் பின்னர் உரிய எமிரேற் அதிகாரிகளிடம் (அவர்களுடைய விசா வழங்கிய எமிரேற்) தங்களுடைய தண்டப் பணத் தொகையிலிருந்து விலக்குப் பெற்று குடிவரவு, குடியகல்வு அதிகாரி களினால் அறவிடப்படும் பெயரளவிலான கட்டணத்தை செலுத்தி நாட்டிலிருந்து வெளியேறலாம்.

III. தங்களுடைய கடவுச்சீட்டுக்கள் காணாமற்போன அல்லது களவாடப்பட்ட இலங்கையர்கள் உரிய எமிரேற்றில் பொலிசுக்கு முறைப்பாடொன்றைச் செய்து அது தொடர்பில் உரிய பொலிசின் ஊடாக வழங்கப்பட்ட சான்றிதழை தங்களுடைய செல்லுபடியாகும் கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக துபாய் இலங்கை கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கலாம். அதன் பின்னர் உரிய எமிரேற் அதிகாரிகளிடம் (அவர்களுடைய விசா வழங்கிய எமிரேற்) தங்களுடைய தண்டப் பணத் தொகையிலிருந்து விலக்குப் பெற்று குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளினால் அறவிடப்படும் பெயரளவிலான கட்டணத்தை செலுத்தி நாட்டிலிருந்து வெளியேறலாம்.

**(ஆ) தமது விசா நிலைமையை சட்டபூர்வமானதாக மாற்றிக் கொண்டு இந்த நாட்டில் இருப்பதற்கு எதிர்பார்க்கும் இலங்கையர்கள்**

I. துபாய் குடிவரவு, குடியகல்வு அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கட்டணத்தை செலுத்தி துபாய் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளினால் விதித்துரைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு, அமர் நிலையங்கள் (Amer Centers) ஊடாக விசா நிலைமைகளை சட்டபூர்வமானதாக்கிக் கொள்தல் வேண்டும்.

II. இந்தப் பின்னணியில், ஆறு மாதங்களுக்கு மேலாக தமது கடவுச் சீட்டின் செல்லுபடியாகும் காலத்தை கொண்டுள்ள (விசா வழங்குவதற்கு பொதுவாக தேவைப்படும் ஆகக்குறைந்த காலம்) இலங்கையர்களுக்கு தமது வதிவிட

நிலைமையை சட்டபூர்வமானதாக்கிக் கொள்வதற்கு நேரடியாக அமர் நிலையங்களுக்கு (Amer Centers) செல்லுதல் வேண்டும்.

III. செல்லுபடியாகும் கடவுச்சீட்டொன்று இல்லாத இருப்பினும் புதிய கடவுச்சீட்டொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் இலங்கையர்கள் சார்பில் கொழும்பிலுள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துடன் உசாவுதலைச் செய்து, அதன் வரையறைக்குள்ளும் அதேபோன்று இலங்கை கடவுச்சீட்டுக்கள் வழங்கும் விசேட தற்றுணிபு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளரின் விடயநோக்கெல்லைக்குள் உள்ளதென்னும் புரிந்துணர்வுடன் ஆகக்குறைந்த காலப்பகுதிக்குள் செல்லுபடியாகும் கடவுச்சீட்டொன்றை வழங்குவதற்கான முறை தொடர்பில் இந்த கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்தினால் ஆராயப்பட்டு வருகின்றது. இதற்கமைவாக கடவுச் சீட்டொன்றுக்காக விண்ணப்பிப்பதற்காக உரியதாகும் அனைத்து ஆவண ரீதியிலான சாட்சிகள் விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக்க வேண்டுமென்பதை நினைவில் நிறுத்திக் கொள்ளவும். (இது தொடர்பிலான மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு www.slcgdxb.com என்னும் எமது இணைய தளத்திற்கு நுழையவும்)

இதற்கு மேலதிகமாக பிரேரிக்கப்பட்டுள்ள பொதுமன்னிப்பு காலத்தில் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் இலங்கை பிரசைகளுக்கு கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்தின் ஊடாக பின்வரும் வசதிகள் வழங்கப்படும்.

I. பிரேரிக்கப்பட்டுள்ள பொதுமன்னிப்பு காலத்தில் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் இலங்கை பிரசைகளுக்கு முன்னுரிமை வழங்கி விசேட கருமபீடமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது. (ஆட்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு)

II. இந்த விசேட காலப் பகுதியினுள் தனி ஆள் ஒருவரின் பொருளாதார மட்டத்தை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு, இலங்கைக்குச் செல்வதற்கான தற்காலிக பயண உரிமபத்திரமொன்று மாத்திரம் இலவசமாக வழங்குவதற்கு பரிசீலனை செய்யப்படும்.

III. பிரேரிக்கப்பட்டுள்ள பொதுமன்னிப்பு காலம் தொடர்பிலான விசாரணைகளுக்காக விசேட தொலைபேசி இலக்கமொன்றும் (04 3986991 மற்றும் 04 3986535 நீடிப்பு 13) ஈமெயில் முகவரியொன்றும் (assistdubaiamnesty@gmail.com) துபாய் கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

IV. ஆட்களின் எண்ணிகையை அடிப்படையாகக் கொண்டு நீண்டகாலம் இலங்கையர்களுக்கு ஒத்துழைப்பு நல்கும் நோக்கில் இந்த நாட்டின் பிரதான குடிவரவு, குடியகல்வு அலுவலகத்தில் இலங்கையைச் சேர்ந்த தன்னார்வ ஊழியர்கள் அமர்த்தப்படவுள்ளனர்.

**பொதுமன்னிப்பு காலப் பகுதியினுள் கடவுச்சீட்டுக்களுக்காக விண்ணப்பிக்கும் போது நினைவில் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டிய வேறு விடயங்கள்.**

* தாங்கள் இலங்கை கடவுச்சீட்டொன்றுக்காக விண்ணப்பிக்கின்றீர்களாயின், துபாய் கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்தின் இணைய தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதன் பொருட்டு ஏற்புடையதாகும் சகல ஆவணங்களினதும் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். இது தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக http://slcgdxb.com/consular-services/passport-services/new-sri-lankan-passport/ என்னும் முகவரிக்கு நுழையவும். இலங்கை கடவுச்சீட்டொன்றை வழங்கும் போது ஏற்புடையதாகும் ஆவணங்கள் என்னும் போது இலங்கை பிரசைகள் சார்பில் கடவுச்சீட்டுக்களை

வழங்குவதற்கு இறுதி தற்றுணிபு கொண்ட குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஆணையாளரினால் விதித்துரைக்கப்பட்டுள்ள ஆவணங்களாகும். இந்த ஆவணங்களின் மூலப் பிரதிகளை முறையாக சமர்ப்பிப்பதன் மூலம் கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்தின் பணிகளை இலகுபடுத்துவதற்கும் தங்களுடைய கடவுச்சீட்டு தாமதமின்றி முன்னதாக பெற்றுக் கொள்வதற்கு வசதியாக அமையும்.

* ஆள் அடையாளத்தை எண்பிப்பதற்காக இலங்கை அத்துடன் / அல்லது ஐக்கிய அரபு எமிரேற் குடியரசினால் வழங்கப்பட்ட எவ்வகையிலுமான அடையாள அட்டையை (இலங்கை தேசிய ஆள் அடையாள அட்டை, இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம், எமிரேற் ஆள் அடையாள அட்டை, ஐக்கிய அரபு எமிரேற் குடியரசினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம், இலங்கை அத்துடன் / அல்லது ஐக்கிய அரபு எமிரேற் குடியரசினால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்) கொண்டு வருவதற்கு நினைவில் நிறுத்திக் கொள்ளவும்.

* கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு துபாய் இலங்கை கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்தினால் பணமாக மட்டு கட்டணங்கள் அறவிடப்படும்.

* குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஆணையாளரினால் விதித்துரைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகள் தங்களிடம் இல்லாதிருப்பின், சேவையினை நாடி கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்திற்கு வருவதற்கு முன்னர் இலங்கையிலிருந்தோ அல்லது ஐக்கிய அரபு எமிரேற் குடியரசிலிருந்தோ பெற்று அவற்றை கொண்டு வருவதற்கு நினைவில் நிறுத்திக் கொள்ளவும்.

* பொது மன்னிப்பு காலப்பகுதியில் இலங்கை பிரசைகளுக்கு உரியதாகும் விசேட மனிதநேய பணிகள் சார்பில் தமது சேவைகளை நிறைவேற்றுவதற்கும் அதேபோன்று அவற்றுக்கு முன்னுரிமை வழங்குதவற்கும் தனது வரையறுக்கப்பட்ட பதவியணிக்கு ஒத்துழைப்பு வழங்கப்படுமென துபாய் மற்றும் வடக்கு எமிரேற்றில் வசிக்கும் இலங்கையர்களிடம் கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகம் எதிர்பார்க்கின்றது. குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஆணையாளரினால் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் தொடர்பில் கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்தில் ஆலோசிப்பதற்கு முயற்சிப்பது தேவையற்ற முரண்பாடுகளுக்கு காரணமாய் அமையுமென்பதோடு, இது கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்திடமிருந்து சலுகைகளை எதிர்பார்க்கும் ஏனைய இலங்கையர்களுக்கு சேவை வழங்குவதற்காக உள்ள பெறுமதிமிக்க காலத்தை வீணடிப்பதாகும். ஆதலால், அரசாங்க நிறுவனமொன்றாக கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்களுக்கு உட்பட்டு அதன் பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்பதுடன், அதேபோன்று தமது விடயநோக்கெல்லையின் கீழ்வரும் துபாய் மற்றும் வடக்கு எமிரேற்றில் வசிக்கும் இலங்கையர்களுக்கு உதவும் போது அதற்குரிய வரையறைகள் உள்ளதென்பதையும் நினைவில் நிறுத்திக் கொள்ளவும்.

* துபாய் இலங்கை கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகமானது பிரேரிக்கப்பட்டுள்ள பொது மன்னிப்பு காலப் பகுதியில் அதன் ஆகக்கூடிய ஒத்துழைப்பினை வெளிப்படுத்துவதோடு, பொறுப்புவாய்ந்த, சட்டத்திற்கு மதிப்பளிக்கும் அத்துடன் ஒழுக்கம் நிறைந்த பிரசைகளாக இந்த நாட்டில் சட்டத்திற்கு முரணாக செயற்பட்டுள்ள இலங்கையர்கள் அனைவரிடமும் மலர்ந்துள்ள இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.